**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு**
**பாதுகாப்பு அமைச்சு**
**வர்த்தக வெடிபொருட்கள், சுடுகலன்கள்**
**மற்றும் ரவைகளை கொள்வனவு செய்யும் பிரிவு**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## இலங்கை கடற்படையின் வர்த்தக வெடிபொருட்கள், சுடுகலன்கள் மற்றும் ரவைகளை கொள்வனவு செய்யும் பிரிவுக்காக 287,170 கிலோகிராம் வோட்டர் ஜெல் வெடிபொருட்களின் பெறுகை

## ஒப்பந்த அடையாள இல.: MOD/SLN/03/2025

1. இலங்கை கடற்படையின் CEFAP பிரிவுக்காக கீழ் குறிப்பிடப்பட்ட உருப்படியின் பெறுகைக்கு பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து பாதுகாப்பு அமைச்சு (MOD), செயலாளரின் சார்பில் பாதுகாப்பு அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழு (MPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

   ஒப்பந்த அடையாள இலக்கம்: *MOD/SLN/03/2025*

   பெறுகை பெயர்: இலங்கை கடற்படை CEFAP பிரிவுக்காக 287,170 கிலோகிராம் வோட்டர் ஜெல் வெடிபொருட்களின் பெறுகை

   விலைமனுதாரர் ஒருவருக்காக ஒரு விலைமனு அனுமதிக்கப்படுவதோடு மாற்று அல்லது தேர்வு விலைமனுக்கள் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

2. உள்ளூர் உற்பத்தியாளர்கள், உள்ளூர் முகவர்கள் ஊடாக உற்பத்தியாளர்கள்/ முதன்மையாளர்கள், இறக்குமதி மற்றும் வழங்குநர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

3. இந்த விலைமனு நடைமுறை சர்வதேச போட்டிரீதியான விலைமனு (ICB) நடைமுறையின் கீழ் மேற்கொள்ளப்படுவதோடு இந்தத் திட்டம் இலங்கை அரசின் (GOSL) நிதி மூலம் நிதி அளிக்கப்படும். குறித்த நிபந்தனைகள் இலங்கை பெறுகை வழிகாட்டல் மற்றும் நிதி ஒழுங்குமுறைகளுக்கு அமைய நிர்வகிக்கப்படும்.

4. இந்த விலைமனுக் கோரலுக்கு நிதி அறிக்கை, கடந்த 3 ஆண்டுகளுக்கான கடந்த கால செயல்திறன் அறிக்கை, கொள்வனவுக்காக கொடுப்பனவு மேற்கொண்ட பற்றுச்சீட்டு, விலைமனு ஆவணம் மற்றும் அற்றோணித் தத்துவத்திற்கான (Power of Attorney) அதிகாரத் தரச்சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

5. இந்த கேள்விமனுவின் கீழ் சமர்ப்பிக்கப்படும் விலைமனு திறக்கப்படும் திகதியில் இருந்து 2026 ஜூலை 13 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

6. விலைமனுவுடன் 2026 செப்டெம்பர் மாதம் 07 ஆம் திகதி வரை செல்லுபடியான விலைமனுப்பிணை ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு அது பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் பெயரில் இருத்தல் வேண்டும். விலைமனுப் பிணை இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு அது இலங்கை மத்திய வங்கியினால் அதன் அசல் வடிவில் (வங்கியின் அசல் கடிதத் தலைப்பில்) அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனையற்ற மற்றும் கோரும்போது பெறத்தக்கதாக இருத்தல் வேண்டும். விலைமனுப் பிணை தொகை 2024 பெறுகை வழிகாட்டலில் பரிந்துரைக்கப்பட்ட ரூபா 7,250,000.00 ரூபாவாக இருத்தல் வேண்டும்.

7. விலைமனு ஆவணங்களை வழங்கல், ஏற்றல் மற்றும் நிறைவு செய்யும் திகதிகள் மற்றும் நேரங்கள் கீழுள்ளவாறு இருத்தல் வேண்டும் என்பதோடு குறித்த விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்திற்கு பங்கேற்க முடியும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

   (a) விலைமனுக்களை வழங்குவதற்கு ஆரம்பிக்கும் திகதி
       - 2026 பெப்ரவரி மாதம் 02

   (b) விலைமனுக்களை வழங்கும் இறுதித் திகதி மற்றும் நேரம்
       - 2026 மார்ச் மாதம் 16 அன்று 1500 மணி வரை

   (c) விலைமனுக்களை ஏற்றல்/ நிறைவு செய்தல் இறுதித் திகதி மற்றும் நேரம்
       - 2026 மார்ச் 17 அன்று 1400 மணி வரை

   (d) விலைமனுக்களை திறக்கும் இடம், திகதி மற்றும் நேரம்
       - பாதுகாப்பு அமைச்சு, பெறுகைக் கிளை, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, இலங்கை, 2026 மார்ச் மாதம் 17 ஆம் திகதி 1400 மணி

8. ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட முழுமையான விலைமனு ஆவணத் தொகுதி ஒன்றை கீழுள்ள முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ள முடியும்.

   **தலைமை நிதி அதிகாரி (பெறுகை மற்றும் திட்டங்கள்)**
   **பெறுகைப் பிரிவு,**
   **இரண்டாவது மாடி,**
   **பாதுகாப்பு அமைச்சு,**
   **பாதுகாப்பு தலைமையக வளாகம்,**
   **ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே, இலங்கை**

   அதற்காக வேலை நாட்களில் 0900 தொடக்கம் 1500 மணிக்கு இடையே, 2026 பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி தொடக்கம் 2026 மார்ச் மாதம் 16 ஆம் திகதி வரையான காலத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 60,000.00 தொகையை செலுத்திய பின் விலைமனு ஆவணங்களை பெற முடியும்.

   விலைமனுக்களை சமர்ப்பிக்கும்போது, விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள வடிவத்தை மாத்திரம் பயன்படுத்தல் வேண்டும். மூல விலைமனு மற்றும் நகல் விலைமனுவை வெவ்வேறாக முத்திரை இட்டு முத்திரை இடப்பட்டுள்ள ஒரு உறையில் இட்டு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது பாதுகாப்பு அமைச்சின் பெறுகைக் கிளையில் வழங்கப்பட்டிருக்கும் விலைக்கேட்புப் பெட்டிக்கு, மேலுள்ள வரிசை இலக்கம் 07 இல் தரப்பட்டிருக்கும் திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் இடுதல் வேண்டும்.

9. ஆர்வம் கொண்ட விலைமனுதாரர்களுக்கு, இலவசமாக பரீட்சிப்பது/ கொள்வனவு செய்வதற்கு, ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட முழுமையான ஆவணத் தொகுதி ஒன்றை பாதுகாப்பு அமைச்சு, பெறுகை பிரிவு, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே, இலங்கை (தொலைபேசி: 94-11-2390719, தொலைநகல்: 94-11-2390720, மின்னஞ்சல்: procurement@defence.lk) இடமிருந்து, தலைமை நிதி அதிகாரிக்கு (பெறுகை மற்றும் திட்டங்கள்) எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்து 2026 பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி தொடக்கம் 2026 மார்ச் மாதம் 16 ஆம் திகதி வரை வேலை நாட்களில் 0900 தொடக்கம் 1500 மணிக்கு இடையே பெற்றுக்கொள்ள முடியும்.

10. பாதுகாப்பு அமைச்சின் பணிப்பாளர் சபையில் இருந்து விலைமனு ஆவணங்களை வாங்குவதற்கு முன், 1987 இன் 3 ஆம் இலக்கம் கொண்ட பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்கும்படி விலைமனுதாரர்களுக்கு அறியத்தரப்படுகிறது.

11. விலைமனுக்களை கீழுள்ள முகவரிக்கு 2026 மார்ச் மாதம் 17 ஆம் திகதி 1400 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் ஒப்படைத்தல் வேண்டும் என்பதோடு, தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

    **தலைமை நிதி அதிகாரி (பெறுகை மற்றும் திட்டங்கள்)**
    **பெறுகைப் பிரிவு,**
    **இரண்டாவது மாடி,**
    **பாதுகாப்பு அமைச்சு,**
    **பாதுகாப்பு தலைமையக வளாகம்,**
    **ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே, இலங்கை**

12. விலைமனு ஆவணங்களை பரீட்சிப்பது/ கொள்வனவு செய்தல் மற்றும் விலைமனுக்களை திறப்பதற்காக பங்கேற்கும் நபர்களின் பெயர்கள், தேசிய அடையாள அட்டை/ கடவுச் சீட்டு இலக்கம், பாதுகாப்பு அமைச்சு வளவுக்கு பிரவேசிப்பதற்கு 03 நாட்களுக்கு முன் எழுத்துமூலமாக தலைமை நிதி அதிகாரி (பெறுகை மற்றும் திட்டங்கள்), பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவித்தல் வேண்டும்.

    (தொலைபேசி: 011-2390719, தொலைநகல்: 011-2390720, மின்னஞ்சல்: procurement@defence.lk)

13. மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்.

    முகவரி:
    **தலைமை நிதி அதிகாரி (பெறுகை மற்றும் திட்டங்கள்)**
    **பெறுகைப் பிரிவு,**
    **இரண்டாவது மாடி,**
    **பாதுகாப்பு அமைச்சு,**
    **பாதுகாப்பு தலைமையக வளாகம்,**
    **ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே, இலங்கை**

    தொலைபேசி: 00-94-11-2390719
    தொலைநகல் : 00-94-11-2390720
    மின்னஞ்சல் : procurement@defence.lk

    முகவரி:
    **பணிப்பாளர்,**
    **வர்த்தக வெடிபொருட்கள், சுடுகலன்கள் மற்றும் ரவைகளை கொள்வனவு செய்யும் பிரிவு, வெலிசர, ராகம.**

    தொலைபேசி: 00-94-11-2958227
    00-94-11-2955514
    மின்னஞ்சல் : director.cefap@gmail.com

**தலைவர்**
**அமைச்சு பெறுகைக் குழு**